[29th October 1958

(இ) கல்லூரிகள் எத்தனை ? அவற்றில் படித்த மாணவர் எத்தனை ?

(ஈ) 1958 மார்ச்சில் சென்னை ராஜ்யத்தில்—

(i) எத்தனை ஆரம்பப் பள்ளிகள், அவைகளில் எத்தனை மாணவர்கள் ?

(ii) எத்தனை உயர் நிலைப்பள்ளிகள், அவைகளில் எத்தனை மாணவர்கள் ?

(iii) கல்லூரிகள் எத்தனை ? அவைகளில் மாணவர் எத்தனை ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*), (*b*), (*c*) *and* (*d*) A statement[a] is placed on the table of the House. I may also point out that the 1946 figures related to the entire Madras State as it then existed. Separate figures could not be calculated immediately.

SRI N. R. THIAGARAJAN : நான் கொடுத்திருக்கின்ற கேள்வி சரியாகத்தான் இருக்கிறது என்று நினைக்கிறேன். இதைப்பற்றி நிதி அமைச்சர் அவர்கள் சரியான புள்ளி விவரங்களை சேர்த்து பதில் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : I have already explained this, Sir. The hon. Member wanted figures for the districts that we have in the Madras State. For the year 1946 separate figures could not be obtained. So figures relating to 1946 in the Madras State as it existed then have been given.

11-40 a.m. SRI A. VEDARATHNAM : 1946-ம் வருஷத்திய புள்ளி விவரத்தைக் காட்டிலும், 1957-ம் வருஷத்திய புள்ளி விவரம் ஆரம்பப் பள்ளிகள் விஷயத்தில் குறைவாக இருக்கக் காரணம் மாகாணப் பிரிவினை என்று கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் கல்லூரிகள் விஷயத்திலும், ஹை ஸ்கூல்கள் விஷயத்திலும் இந்தப் புள்ளி விவரங்கள் மாறுபட்டிருக்கக் காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதிலே பார்க்கும் போது நான் ஒன்றாக இருக்கும்போது, 1946-ல் 633 ஹை ஸ்கூல்கள் இருந்தன. பிரிந்த பிற்பாடு, 891 ஹை ஸ்கூல்கள் 1957-ம் வருஷக் கடைசியில் இருக்கின்றன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி ஆச்சரியப்படவேண்டியதில்லை. அவ்வளவு அதிக ஹை ஸ்கூல்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

Hut dwellers

* 693 *Q*.—SRI N. MARUDACHALAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of applications received from hut-dwellers in Coimbatore district for assignment of the poramboke lands; and

(*b*) the action taken thereon by the Government?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) The time and labour involved in gathering the particulars asked for in the question will not be commensurate with the advantages to be gained.

SRI N. MARUDACHALAM : ஸார், ஹரிஜனங்கள் வீடு கட்டிக் கொள்வதற்கும் விவசாயம் செய்வதற்கும் விண்ணப்பம் போடுகிறார்கள். அந்த விண்ணப்பங்களுக்கு உடனடியாக பதில் கிடைப்பதில்லை. பதில்

[a] Printed as Appendix V on page 85 infra.

29th October 1958]

கிடைக்காததால் என்னசெய்வது என்றே அவர்களுக்குத் தெரியவில்லை. அவர்களுக்கு உடனடியாகப் பதில் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அரசாங்கம் அந்த மனுக்களைக் கவனித்து, அதை விசாரித்து அவர்களுக்கு மனை கொடுக்க பிரயத்தினம் செய்கிறார்கள். வெறும் பதில் கொடுப்பதால் மட்டும் பிரயோசனமில்லை. ஆகையால் எங்கெங்கே கொடுக்க முடியுமோ, அங்கங்கே கொடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : புறம்போக்கு தரிசு நிலங்களை நிலமற்ற ஏழை விவசாயிகள், ஹரிஜனங்கள் சாகுபடி செய்து விவசாயம் நடந்துகொண்டிருக்கும்போது, குழப்பம் ஏதுமில்லாமல் சாகுபடி செய்து விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கும் உணவுப் பெருக்குக்கும் வசதியளிக்க அந்தத் தரிசு நிலங்களை அவர்களுக்கு அடமானம் செய்ய அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தக் கேள்வி குடிசைகள் கட்டிக்கொள்வதைப்பற்றிய கேள்வி. சாகுபடிபற்றித் தனியாகக் கேள்வி போட்டால் நான் பார்த்துப் பதில் சொல்ல முடியும்.

Removal of Panchayat Board Presidents from offices

* 694 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் ஸ்தல-ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1956–57—1958 இன்றுவரை நமது ராஜ்யத்தில் எத்தனை பஞ்சாயத்து போர்டு தலைவர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்கள் ?

(ஆ) எந்தெந்த ஊர் பஞ்சாயத்து தலைவர்கள் ?

(இ) காரணம் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) 49.

(*b*) *and* (*c*) A statement[a] is placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், திருநெல்வேலி ஜில்லாவில் விளாத்திகுளம் பஞ்சாயத்து போர்டு தலைவர் பேரில் ஆயிரக் கணக்கான ரூபாய்கள் கையாளப்பட்டதாகப் புகார்வந்து, அதைப் பற்றி விசாரணைசெய்து, அதன் பேரில் பஞ்சாயத்து போர்டைக் கலைத்து அங்கு ஒரு வருஷத்திற்குத் தேர்தல் நடக்கக்கூடாது என்று உத்திரவிடப் பட்டிருக்கிறதேயொழிய அந்தத் தலைவரின் பேரில் நடவடிக்கை ஒன்றும் எடுக்கப்படாததன் காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I would like to have notice.

SRI V. K. KOTHANDARAMAN : இது போன்று பஞ்சாயத்து போர்டுகளில் ஊழல்கள் ஏற்படக் காரணம் டெபுடி பஞ்சாயத்து அதிகாரிகளே நிர்வாகம் நீதி இரண்டையும் கவனிக்கவேண்டியிருப்பதால் அவர்கள் இந்தக் கணக்குகளை சரிவரத் தணிக்கை செய்ய முடியவில்லை என்ற காரணம்தான் என்பதை அரசாங்கம் அறியுமா ?

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் தன்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்லக்கூடாது. ஆங்கிலத்தில் சொல்வார்களே, அதாவது " ஆர்குமெண்ட்ஸ் ", " இன்ஸினுவேஷன் " இது மாதிரியுள்ள கேள்விகள் கேட்கக்கூடாது என்று சொல்ல விரும்புகிறேன். இதேமாதிரி கேள்வி கேட்டால் " அவுட் ஆப் ஆர்டர் " என்று சொல்லிவிடுவேன். கேள்வி நேரத்தில் கேள்விதான் கேட்க வேண்டும். பிரசங்கம் செய்யக்கூடாது. I would like to point out to the hon. Members that in asking supplementaries they are giving the information themselves and

[a] Printed as Appendix VI on pages 86–95 infra.